Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.11 (LW.14)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தெய்வேந்திரன் | ஜாதி | : | |
| த/பெ | : | சாலைமுத்து | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கன்னிவாடி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

(4, 5, 7 எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 மற்றும் 9 முதல் 11, 14 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது. 6, 8, 12, 13 வது எதிரிகள் இறந்துவிட்டார்கள்.)

**முதல் விசாரணை**

நான் கன்னிவாடியில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 27.04.2004 ஆம் தேதி நான் எனது முதலாளி ராஜாராம் என்பவருக்கு சொந்தமான தோணிமலைக்கும், பன்றிமலைக்கும் இடையில் உள்ள தோட்டத்திற்கு நான் விவசயாம் செய்து கொடுத்துக்கொண்டிருந்தேன். அப்போது அன்றையதினம் எனது முதலாளிக்கு சொந்தமான தோணிமலையில் உள்ள தோட்டத்தில் அங்கு தானாக வளர்ந்த தோதகத்தி மரங்களை வெளிநபர்கள் வந்து வெட்டிக்கொண்டிருப்பதை பார்த்துவிட்டு எனது முதலாளி ராஜாராமுக்கு தகவல் சொன்னேன். எனது முதலாளி ராஜாராம் கன்னிவாடி வன பாதுகாவலர் அலுவலகத்திற்கு தகவல் சொன்னார். அப்போது அங்கு வனச்சரக அலுவலர் இல்லாததால் அங்கே வனவர் மட்டும் இருந்ததாகவும், அதனால் செம்பட்டி வனச்சரக பீட்டிற்கு சொல்லி அங்கிருந்து ஒரு குழுவாக வனச்சரகத்தை சேர்ந்த அதிகாரிகள் எனது முதலாளி தோட்டத்திற்கு வந்தார்கள். அப்போது தோதகத்தி மரங்களை வெட்டிக்கொண்டிருந்தார்கள். அந்த நபர்களை வனச்சரக அலுவலகத்தில் இருந்து வந்த குழுக்கள் அவர்களை

பிடித்தார்கள். அப்போது அங்கு வெட்டப்பட்ட மரங்களை எண்ணினார்கள். அதில் 7 மரங்கள் வெட்டப்பட்டு செதுக்கிய மரங்கள் 28 இருந்தது. 2 உருட்டு மரங்கள் இருந்தது. அந்த மரங்களை வனச்சரக அதிகாரிகள் எனது முதலாளியிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றார்கள். தோதகத்தி மரங்களை வெட்டிய நபர்களை பிடித்துக்கொண்டு சென்றார்கள். அதன்பின்பு 2 நாட்கள் கழித்து 5 மரத்துண்டுகள் புதருக்குள் கிடைத்ததாக சொல்லி வனச்சரக அலுவலர்கள் எங்களிடம் ஒப்படைத்தார்கள். அதன்பின்பு வனச்சரக அலுவலர்கள் 2 செதுக்கிய மரத்துண்டுகளை எங்களிடம் ஒப்படைத்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor